## பகுதி-அ(40 மதிப்பெண்கள்)

**1.அ. பின்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு விடை தருக. 5×1=5**

நாம் உண்ணும்காரசாரமான,ருசியான உணவைத் தயாரிக்கப் பயன்படும் மிளகாயின் தாய்வீடு தென் அமெரிக்காவைச் சேர்ந்த போல்வியா. தென் அமெரிக்காவிலும்,மெக்சிகோவிலும் காரத்திற்குப் புகழ்பெற்ற பல்வேறு வகைமிளகாய் ரகங்கள்விளைகின்றன.இந்தியாவில் கோவாவில் காலடி எடுத்து வைத்த போர்ச்சுக்கல் வணிகர்கள் நமக்கு மிளகாயை முதன் முதலாக அறிமுகப்படுத்தினர்.

இந்தியாவின் தென்பகுதியில் மிளகாய் அறிமுகமாகி, 250 ஆண்டுகளுக்குப் பிறகே மராட்டியர்கள் அதைப் பயன்படுத்தத் தொடங்கினர். உலக அளவில் இந்தியா மிளகாய் உற்பத்தியில் முன்னிலையில் உள்ளது. மிளகாய் இரகங்களுக்கு புகழ்பெற்ற ஆந்திரத்தின் குண்டூரில் 75% மிளகாய் வகைகள் விளைகின்றன.

இந்தியா பல்வேறு நாடுகளுக்கு மிளகாயை ஏற்றுமதியும் செய்கிறது. இந்தியாவில் மட்டும் 200 ரக மிளகாய்கள் விளைகின்றன. அதில் குண்டூரில் மட்டும் 36 வகைகள் உண்டு. ஏனெனில் இப்பகுதி மிளகாய் விளைய ஏதுவான பகுதியாகும். இப்பகுதி முழுவதும் உள்ள கருப்பு கரிசல் மண் அமைப்பு தான் இதற்கு காரணமாகும். உணவில் காரத்திற்கு, முன்னர் மிளகை பயன்படுத்தி வந்தவர்கள் தமிழர்கள்.காரச்சுவையைருசிப்பதோடு அறுசுவையும் உணவில் சேர்த்தால் தான் நாம் உடல் நலத்தோடும் வாழ முடியும்.

**வினாக்கள்:**

1.மிளகாயை உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு எது?

அ) ஸ்பெயின். ஆ) கனடா. இ)போல்வியா. ஈ) எகிப்து

2 இந்தியாவிற்கு மிளகாயைக் கொண்டு வந்தவர்கள் யார்?

அ) போர்ச்சுக்கல் வணிகர்கள். ஆ) இத்தாலி வணிகர்கள்

இ) ஜெர்மன் வணிகர்கள். ஈ) அமெரிக்க வணிகர்கள்

3. தற்போது இந்தியாவில் மட்டும் எத்தனை ரக மிளகாய்கள் விளைகின்றன?

அ)500. ஆ)50. இ)200. ஈ)25

4. மிளகாய் விளைய ஏதுவான மண் எது?

அ) செம்மண். ஆ) வண்டல் மண்.

இ) கருப்பு கரிசல் மண். ஈ) உவர்மண்

5. உணவில் காரத்திற்கு பழந்தமிழர்கள் எதைப் பயன்படுத்தி வந்தனர்?

அ) கடுகு. ஆ) மிளகு. இ) சீரகம். ஈ) வெந்தயம்

**(அல்லது)**

**ஆ.பின்வரும் பத்தியைப் படித்து அதனை தொடர்ந்து வரும் பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு விடை தருக.**

இசையில் ஈடுபடாத உயிர்கள் இல்லை. படமெடுத்தாடும் பாம்பு மகுடியிசையில் மயங்குகிறது. கொடிய வன விலங்குகளும் இசையில் தம்மை மறக்கின்றன.பாரம் சுமக்கும் எருதுகள் வண்டிக்காரன் பாடும் தெம்மாங்கில் தம்மை மறந்து வண்டியை இழுத்துச் செல்கின்றன. கண்ணன் குழல் இசையைக்கேட்டுப் பட்டமரங்கள் தளிர்க்கும் காட்சியைப் பெரியாழ்வார் அருமையாகக் குறிப்பிட்டுள்ளார்.ஓரறிவு உயிர்களாகிய தாவரங்களும் இசை கேட்டு இன்பறுகின்றன என்பதை இக்கால அறிவியலறிஞர்கள் மெய்ப்பித்து வருகின்றனர்.

இசை மன நோய்க்கு நல்ல மருந்தாகப் பயன்படுகிறது. உள நோய் தீர்க்கும் பெரு மருந்தாகவும் இசையைப் பயன்படுத்தி பெரும் வெற்றி கண்டனர் நம் பெரியோர். பிறவிப் பிணியைத் தீர்த்துப்பேரின்பப்பெருவாழ்வு அளிக்கும் இறைவன் இசைக்குஉருகுபவன்; இசை வடிவாய் எங்கும் நிறைந்திருப்பவன்;ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்குபவன் இறைவன் என்று போற்றுகிறார் சுந்தரர்.இறைவனின் இவ்வியல்பு உணர்த்து நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய தேவார, திருவாசக, திவ்யப் பிரபந்தப் பாடல்கள் இன்றும் தமிழிசை செல்வங்களாக விளங்குகின்றன.

**வினாக்கள்:**

1. ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்குபவன் இறைவன் எனப் போற்றுபவர் யார்?

அ). திருநாவுக்கரசர். ஆ) சுந்தரர். இ) ஆண்டாள். ஈ) திருமூலர்

2. படமெடுத்தாடும் பாம்பு எந்த இசைக்கு மயங்கும்?

அ) மகுடி. ஆ) புல்லாங்குழல். இ)வீணை. ஈ) நாகசுரம்

3. இசை எந்த நோய்க்கும் மருந்தாகப் பயன்படுகிறது?

அ)உடல் நோய். ஆ) பசிப்பிணி இ) மனநோய். ஈ) வயிற்று நோய்

4. எருதுகள் வண்டிக்காரன் பாடும் எப்பாட்டில் தம்மை மறந்து இழுத்துச் செல்கின்றன?

அ) தெம்மாங்கு. ஆ) வில்லுப்பாட்டு. இ) கும்மி. ஈ) தாலாட்டு

5. தமிழிசையின் செல்வங்களாக விளங்குவனஎவை?

அ) சிலப்பதிகாரம், மணிமேகலை. ஆ) நாலடியார்,மூதுரை

இ) தேவாரம், திருவாசகம். ஈ) கலம்பகம், அந்தாதி.

**2.அ.பின்வரும் பத்தியைப் படித்து தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு விடை தருக. 5×1=5**

திருக்குற்றாலக் குறவஞ்சி என்னும் நூலை இயற்றிய ஆசிரியர் திரிகூடராசப்ப கவிராயர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசியை அடுத்துள்ள மேலகரம் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் சைவ வேளாண் குலத்தவர். திருக்குற்றாலநாதர் கோயில் வித்துவான் என்னும் சிறப்புப் பட்டமும் இவருக்குஉண்டு. மதுரையை ஆட்சி செய்த முத்துவிசயரங்க சொக்கநாத நாயக்கர் திருக்குற்றாலக் குறவஞ்சியின்சிறப்பைப் பாராட்டி திருக்கூட ராசப்பக்கு'குறவஞ்சிமேடு'என்னும் நிலப் பகுதியைப்பரிசாகக் கொடுத்து மகிழ்ந்துள்ளார்.

குறவஞ்சி என்பது நாடக வகையைச் சார்ந்த சிற்றிலக்கியம் ஆகும். குறவஞ்சி இலக்கியங்களில் தனிச்சிறப்பு உடையது திருக்குற்றாலக் குறவஞ்சி ஆகும். திருக்குற்றாலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் திருக்குற்றால நாதர். இவரே இந்நூலின் பாட்டுடைத் தலைவர், பாட்டுடைத் தலைவி வசந்த வல்லி.

**வினாக்கள்:**

1.குறவஞ்சி என்பது இவ்வகையைச் சேர்ந்த இலக்கியம்?

அ) நாட்டியம் ஆ) நாடகம். இ) கவிதை. ஈ) காப்பியம்

2. குற்றாலக் குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவி யார்?

அ) வசந்தவல்லி. ஆ)இன்பவல்லி. இ) ஆனந்தவல்லி. ஈ) குறவள்ளி

3. குற்றாலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் நாமம் என்ன?

அ) சொக்கநாதர். ஆ) படம்பக்கநாதர்

இ) திருக்குற்றால நாதர். ஈ) விஸ்வநாதர்

4. முத்து விசயரங்க சொக்கநாதர்எப்பகுதியை ஆட்சி செய்தார்?

அ) திருச்சி. ஆ) மேட்டூர் இ) மதுரை. ஈ) மருதமலை

5. திரிகூட ராசப்பக் கவிராயர் பரிசாகப் பெற்ற பகுதி யாது?

அ) குறவஞ்சி மேடு ஆ) விருதுநகர்.

இ) குன்றத்தூர். ஈ) மேலூர்.

**(அல்லது)**

**ஆ. பின்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பலவும் தெரிவு செய் வினாக்களுக்கு விடை தருக.**

தமிழகத்தை மூவேந்தர் மட்டுமின்றி பல்லவர், களப்பிரர் என ஏராளமான அரசர்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள்.ஓம் மன்னர்களைப் பற்றிய வரலாறு அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை,பண்பாடு ஆகியவற்றைப் பற்றி தொல்லியல் சான்றுகள் புதுப்புது தகவல்களை தருகின்றன.அப்படி தமிழகத்தில் இதுவரை பல இடங்களில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று மரக்காணம் என்னும் ஊர்.

இவ்வூர் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்துக்கு அருகில் உள்ளது. சிறுபாணாற்றுப்படை நூலில், இவ்வூர் 'எயிற்பட்டினம்’என்று குறிப்பிடப்படுகிறது. ஏன் என்றால் மதில் என்று பொருள்.’மதியோடு பெரியபட்டினம்’ – மதிலைக் கொண்ட கடற்கரைப்பட்டினம் என்பதே பொருள்.

மணற்கானம் என்ற சொல்லே பிறகாலத்தில் மரக்காணமாகத் திரிந்தது என அறிஞர் இராசமாணிக்கனார் குறிப்பிடுகிறார். இவ்வூரில் உள்ள பூமீஸ்வரர் கோவிலுக்கு அருகில் 2005,2006 ஆம் ஆண்டுகளில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வில் சுடுமண் குழாய், சொரசொரப்பான சுடுமண் பானை ஓடுகள் கிடைத்தன.

**வினாக்கள்:**

1.பழங்காலமக்களின்வாழ்க்கை முறை பற்றிய புதுப்புதுத் தகவல்களை நமக்குத் தருபவை எவை?

அ) இலக்கியச் சான்றுகள். ஆ) அறிவியல் சான்றுகள்

இ) அரசியல் சான்றுகள். ஈ) தொல்லியல் சான்றுகள்

2. மரக்காணம் எம்மாவட்டத்தில் அமைந்துள்ளது?

அ) விழுப்புரம்ஆ) காஞ்சிபுரம். இ) வேலூர். ஈ) கடலூர்

3.” எயிற்பட்டினம்” எனமரக்காணத்தைக்குறிப்பிடும் நூல் எது?

அ) கலித்தொகை. ஆ) பரிபாடல்.

இ) சிறுபாணாற்றுப்படை ஈ) திருமந்திரம்

4. எச்சொல் மரக்காணமாகத் திரிந்தது?

அ)மணற்கானம். ஆ)மணற்மலை. இ)வடுமணல். ஈ) கொடுமணல்

5.எயில் என்ற சொல்லின் பொருள் யாது?

அ)மணல். ஆ) காடு. இ) மதில். ஈ)அகழி.

**3. சான்று தருக. (எவையேனும் நான்கனுக்கு மட்டும்). 4×1=4**

1. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

அ.உரை ஆ.தட்டு இ.கெடு ஈ. சூடு

2. முறை நிரல்நிறைப்பொருள்கோள்

அ.அன்பும்அறனும் ஆ.ஆலத்து மேல

இ. விலங்கொடு மக்கள் ஈ. சொல்லரும் சூல்பசும்

3. திணை வழாநிலை

அ.மாடுவந்தான். ஆ. மாடு வந்தன

இ. மாடு வந்தது. ஈ. மாடுகள் வந்தது.

4. மருதநில விலங்கு

அ.எருமை, நீர்நாய் ஆ. எருமை, மான்

இ. முதலை, சுறா ஈ. புலி,கரடி

5. உரிச்சொல் தொடர்

அ. சிறந்தது ஆ. உறுமீன்

இ.பாடி அழைத்தான் ஈ. பறந்த பறவை

**4. கூறியவாறு செய்க. (எவையேனும் நான்கனுக்குமட்டும்) 4×1=4**

1.எற்பாடு (பிரித்துக் கூறு)

அ.எல்+பாடு ஆ.எற்+பாடு இ.எள்+ பாடு ஈ.எ+பாடு

2. ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு. (கொண்டுகூட்டுப் பொருள்கோள் ஆக்குக)
அ. ஆலத்து மேல் குவளை ஆ. ஆலத்து மேல குரங்கு
இ. ஆலத்து கீழே குரங்கு ஈ. ஆலத்து எதிரே குரங்கு

3. குயில் கூவும் (மரபு வழுவமைதியாக்குக)

அ. குயில் கதறும் ஆ. குயில் கத்தும்

இ. குயில் கீச்சிடும் ஈ. குயில் கரையும்

4.அமலன் வந்தான் (விளித்தொடராக்குக)

அ. அமலன் வருக ஆ.வருகஅமலன்

இ.அமலாவா! ஈ.அமலன்வரவேண்டும்

5.பாடினான் (வினையாலணையும் பெயராக மாற்றுக)

அ.பாடுவான் ஆ.பாடியவன் இ. பாடுகிறான் ஈ. பாடுகின்றான்

**5. இலக்கணக்குறிப்பு தருக. (எவையேனும்நான்கனுக்கு மட்டும்) 4×1=4**

1. விளரி யாழ்

அ. குறிஞ்சி ஆ. நெய்தல் இ.முல்லை ஈ. பாலை

2. பாடிய பாடல்

அ. பெயரெச்சத் தொடர். ஆ. வினையெச்சத் தொடர்

இ. விளித்தொடர் ஈ. எழுவாய்த் தொடர்

3.என்அம்மை வந்தாள்

அ. பால் வழுவமைதி ஆ. இட வழுவமைதி

இ. கால வழுவமைதி ஈ. திணை வழுவமைதி

4.கயல்விழி வந்தாள்

அ. வேற்றுமைத்தொகை ஆ. உவமைத்தொகை

இ. அன்மொழித்தொகை ஈ.வினைத்தொகை

5.பருப்பு உள்ளதா? - எவ்வகை வினா?

அ. கொளல் வினா ஆ. கொடை வினா

இ. அறிவினா ஈ. அறியா வினா

**6. நிரப்புக (அனைத்து வினாக்களுக்கும் விடையளி) 4×1=4**

1.செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளவெடுப்பது.........அளபெடை.

அ.செய்யுளிசை அளபெடை ஆ. இன்னிசை அளபெடை

இ. சொல்லிசை அளபெடை ஈ.ஒற்றளபெடை

2.ஒருநாளின் கூறுகளைச் ..............என்பர்.

அ. பெரும்பொழுது ஆ. சிறுபொழுது

இ. முதற்பொருள் ஈ.கருப்பொருள்

3.எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவு பெயர்களை தொடர்ந்து வருவது............... ஆகும்.

அ.வேற்றுமைத்தொகை ஆ. வினைத்தொகை

இ. உம்மைத்தொகை ஈ. உவமைத்தொகை.

4. விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராதல்..............

அ. முதனிலைத் தொழிற்பெயர்

ஆ. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

இ. வினையாலணையும் பெயர்

ஈ. எதிர்மறைத்தொழிற்பெயர்

**7. பின்வரும்செய்யுட்பகுதியைப் படித்து அதனை தொடர்ந்து வரும் பலவுள்தெரிவுசெய் வினாக்களுக்கு விடை தருக. 5×1=5**

விதிமுறை கதலி பூகம் கவரிவால் விதானம் தீபம்

புதியதோர் நிறைநீர்க்கும்பங் கதலிகை புனைந்த மன்றல்

கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற்கற்றோர் சூழ

மதிபுனை காடன் தன்னை மங்கல அணிசெய்தேற்றி

**வினாக்கள்:**

1.இப்பாடல்இடம்பெற்றுள்ள நூல் எது?

அ. திருவிளையாடற் புராணம். ஆ. காசிக்காண்டம்

இ. முல்லைப்பாட்டு. ஈ.இரட்டுறமொழிதல்

2.பாடலின்ஆசிரியர் யார்?

அ.அகத்தியர். ஆ.குலசேகராழ்வர்.

இ. பரஞ்சோதி முனிவர். ஈ. பெருங்கௌசிகனார்

3.கவரி- என்பதன் பொருள் என்ன?

அ.தாமரை. ஆ.சாமரை. இ.சாமந்தி. ஈ.மரை

4. இப்பாடலில் யாருக்கு மரியாதை செய்யப்படுகிறது?

அ.புலவர். ஆ.மன்னன். இ.வீரன். ஈ.அமைச்சர்

5.இந்நூலில்இடம்பெறும் காண்டங்களின் எண்ணிக்கை யாது?

அ.மூன்று. ஆ.நான்கு. இ.ஐந்து. ஈ.ஆறு

**8. பின்வரும்பத்தியைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு விடை தருக. 5×1=5**

இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ணவேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை,

"பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர்

வருவீர் உளீரோ"

என்ற குறுந்தொகை அடிகள் புலப்படுத்துகின்றன.

"மருந்தே ஆயினும் விருந்தோடு உண்"

என்று கொன்றை வேந்தனில் அவ்வையார் பாடியுள்ளார். அவர் பாடிய தனிப்பாடலில்,

"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரெனவேபுளித்த மோரும்–திறமுடனே
புள்வேளூர்ப்பூதன்புரிந்து விருந்து இட்டானஃ(து)
எல்லா உலகும் பெறும்".என்று அவர்
கூறுவதிலிருந்துவள்ளல்களால்விருந்தினர் போற்றப்பட்டதைஅறியமுடிகிறது.

சங்க காலத்திலிருந்தே அரசராயினும்வறியோராயினும், விருந்தினர்களைப்போற்றினர். காலமாற்றத்தில் புதியவர்களாகிய விருந்தினர்களை வீட்டுக்குள் அழைத்து உணவிடுவது குறைந்தது. விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகின. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காக கட்டப்பட்டன.

**வினாக்கள்:**

1.குறுந்தொகை அடிகள்எவற்றைப் புலப்படுத்துகின்றன?

அ.வீரத்தை ஆ.அறத்தை இ.அன்பை ஈ.விருந்தோம்பலை

2. கொன்றை வேந்தனில் ஔவையார் குறிப்பிடும் கருத்து யாது?

அ. கூழானாலும் குளித்துக் குடி

ஆ.கந்தையானாலும் கசக்கிக்கட்டு

இ.மருந்தேஆயினும் விருந்தோடுஉண்

ஈ.அறம்செய் விரும்பு

3.விருந்தினர் யாரால் போற்றப்பட்டனர்?

அ.பெண்களால் ஆ.வள்ளல்களால் இ.துறவிகளால் ஈ.தேவர்களால்

4.தனிப்பாடலில் குறிப்பிடப்படும் அரசன் யார்?

அ. அதிவீரராம பாண்டியர். ஆ. முதலாம் இராஜராஜ சோழன்

இ.புள்வேளூர்ப்பூதன். ஈ. சேரன் செங்குட்டுவன்

5. யாருடைய ஆட்சிக் காலத்தில் மிகுதியான சத்திரங்கள் கட்டப்பட்டன?

அ. சேரர், சோழர் ஆ. பாண்டியன், பல்லவன்

இ. அசோகர் ஈ. நாயக்கர்,மராட்டியர்

**9. விடுபட்ட சீர்களை நிரப்புக: 4×1=4**

1. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்

................ புரள விடல்.

அ.எளியன் ஆ.புல்லார் இ. கல்லார் ஈ.சுற்றார்

2.அன்பிலன்ஆன்ற............... தான்துவ்வான்

என்பரியும்ஏதிலான் துப்பு.

அ.பொருள் ஆ.குடிப்பிறப்பு இ.துணையிலன் ஈ.பகை

3.இடிப்பாரை இல்லாத ஏமரா............

கெடுப்பார் இலானும் கெடும்.

அ.மன்னன் ஆ.அமைச்சன். இ.பகைவன். ஈ.நண்பன்

4. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்

நாமம் கெடக்கெடும்............

அ.கல்வி ஆ.நோய் இ.புகழ். ஈ.அறம்

**பகுதி-ஆ(40 மதிப்பெண்கள்)**

**10.எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடையளி: 2×3=6**

1.முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச்செய்திகளை விவரித்து எழுதுக.

2. விருந்தினரை மகிழ்வித்துக்கூறும் முகமன் சொற்கள் எழுதுக.

3. கோசல நாட்டின் வளத்தை விளக்குக.

4.உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

**11. எவையேனும் மூன்றுஉரைநடை வினாக்களுக்கு விடையளி: 3×4=12**

1.உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

2. மொழிபெயர்ப்பினால் ஏற்படும் நன்மைகளை எழுதுக.

3. தாவரத்தின் பிஞ்சு,குலை, கொழுந்துமற்றும் தானியவகைகளுக்கு வழங்கும் சொற்கள் குறித்து எழுதுக.

4.“நான்கு திசையிலும் நான்” என்று காற்று தன்னைப்பற்றிக் கூறும் செய்திகளை விவரி.

5.செயற்கை நுண்ணறிவு காலத்தில் ஏற்பட்டுள்ள மின்னணுப் புரட்சி குறித்து விவரி.

**12. பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒரு தலைப்பின் கீழ் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. 1×7=7**

1. விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை

2. உரைநடையின் அணிநலன்கள்

3.பாய்ச்சல்

**13. பின்வரும் காட்சியைக்கண்டு கவினுற வரைக. (3)**




**14. ஏதேனும் ஒரு கடிதம் எழுதுக. 1×6=6**

1. உங்கள் பகுதியில் பொது நூலகம் அமைத்துத்தருமாறு நூலகத்துறை அலுவலருக்குக்கடிதம் ஒன்று எழுதுக.

2. உங்கள் பகுதியில் குழந்தைகள் ஓடியாடி விளையாடுவதற்கும்பொதுமக்கள் நடைபயிற்சி மேற்கொள்வதற்கும் ஏற்ற பூங்கா ஒன்று அமைத்துத் தர வேண்டி நகராட்சி தலைவருக்குக் கடிதம் எழுதுக.

**(இரண்டு கடிதங்களிலும் உன் முகவரி: ம. எழிலன்/எழிலி, பாரதியார் தெரு, குரோம்பேட்டை, சென்னை-47 எனக் கொள்க)**

3. உங்கள் பகுதியில்உள்ளபூங்காவில் இலவச இணைய வசதி ஏற்படுத்தித் தருமாறுமாவட்ட ஆட்சியருக்கு மின்னஞ்சல் கடிதம் எழுதுக.

**(உன் முகவரி: முகிலன் @ ஜிமெயில்.காம்)**

**15. ஏதேனும் ஒரு பகுதியில் உள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. 1×6=6**

1. தலைப்பு-குறிப்புச்சட்டகம்-முன்னுரை-கணினி-கணிப்பொறியின் செயல்பாடு-கண்ணிமைக்கும் நேரத்தில் மின்னஞ்சல்-அறிவை விரிவு செய்-இணையம்-நன்மைகள், தீமைகள்-முடிவுரை.

2.தலைப்பு-குறிப்புச் சட்டகம்-முன்னுரை-நட்பு-நட்பாராய்தல்-வள்ளுவர் காட்டும் நல்ல நட்பு-நட்பின் பெருமைகள்-நட்பின் அவசியம்-கூடா நட்பு-முடிவுரை.

3. தலைப்பு-குறிப்புச்சட்டகம்-முன்னுரை-வரலாறும் மாண்புகளும்-பாண்டிய மன்னனால் தமிழ் வளர்ந்தது-பல புராணங்களும் பழமைச் சான்றுகளும்-மதுரை நகர பிறப்பு-சுங்கடிப் புடவை-மீனாட்சி அம்மன் கோயில்-முடிவுரை.